குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 3 - 2 - 59 செவ்வாய் | இசை: 35

அரங்க ரத்தினம் உண்ணுநோன்பு வெல்க!

ராகம்: தன்யாசி. தாளம்: சாபு.

அழகைச் செய்தாய் தமிழ்மொழிக்கே அரங்க ரத்தினமே - நீ
அன்பு செய்தாய் தமிழ்மொழிக்கே அரங்க ரத்தினமே
தழைவைச் செய்தாய் தமிழ்மொழிக்கே அரங்க ரத்தினமே - நீ
தலைமை வைத்தாய் தமிழ்மொழிக்கே அரங்க ரத்தினமே
எழுகஎழுக தமிழ்மொழியை இழிவுசெய்கின்றார் - விழித்
தெழுகஎன்று முழக்கஞ் செய்தாய் அரங்க ரத்தினமே
ஒழுகும்முறை எமக்குரைத்தாய் அரங்க ரத்தினமே - நல்
உயிரினும் தமிழ்மே லென்றாய் அரங்க ரத்தினமே!

கத்தாத கழுதைகண்டு கண்கலங்கினாய் - நல்ல
கழுத்தொடிந்த மாடுகளைக் கண்டு துடித்தாய்
ஒத்தாசை நீ புரிந்தாய் அரங்க ரத்தினமே - நீ
உணர்வு தந்தாய் தமிழருக்கே அரங்க ரத்தினமே
நத்தாத உயிரு முண்டோ உடம்பு தன்னையே - உளம்
நத்தாத தமிழ னுண்டோ முத்தமிழ் தனையே
கைத்தாளம் போடுகின்றாய் புகழ் நிலத்திலே - நீ
காட்டாற்றின் எழுச்சிவைத்தாய் எம் முளத்திலே!

அந்தமிழ்த்தாய் முகத்தினிலே ஆரியக்கறை ஏன்? - நம்
அழகுதமிழ்ச் சோலையிலே ஆகாஷ்வாணி ஏன்?
செந்தமிழ்க்கே இழிவுகண்டால் என்உயிர்தான் ஏன் - நல்ல
செந்தமிழர் வாழ்க்கைச்சுவை அந்தமிழால் தான்
இந்தப்படி தவங்கிடந்தாய் அரங்க ரத்தினமே - வெற்றி
எய்துகநின் உண்ணுநோன்பும் அரங்க ரத்தினமே
வந்ததுண்டு தமிழ்க்குயர்வு தோழா உன்னாலே!
வாழ்கபுகழ் வாழ்கதமிழ் அரங்க ரத்தினமே!

புதுச்சேரி, தி. வ. ஆ. ககூகூ௦ தை மீ உக.

தில்லிக் கழுகு

தில்லிக் கழுகின் பிடியினின்று தப்ப வேண்டும், தில்லிக்குத் தமிழகம் நல்ல பிள்ளையாக நடந்துகொள்வதன் வாயிலாகத் தமிழர்க்கான நலன்களை அடைந்து கொள்ளலாம் என்று சிலர் எண்ணுகின்றார்கள். அது மயக்கமேயாகும்.

தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழ் இனம் என்பன பூண்டற்றுப் போகவேண்டும் என்பதுதான் தில்லிக் கழுகின் முடிவான எண்ணம். இந்த முயற்சியை அது மறைவடமாகச் செய்கின்றதா என்றால் அதுவுமில்லையே. வெளிப்படையாகச் செய்துகொண்டே தமிழா உன்னால் என்ன செய்யமுடியும் என்று கேட்கின்றது தமிழனை நோக்கி.

சென்னை ராச்சியம் என்கின்றது தமிழ் நாட்டை. அதுவேண்டாம் என்று தமிழர்கள் கரடியாகக் கத்தினார்கள். மதித்ததா தில்லிக் கழுகு! அதன் தலைக்கனம் சிறிதாவது குறைந்த பாடுண்டா? மேலும் அதன் தீயவழி நோக்கி இன்னும் இரண்டடி முன்னேறியது. தமிழ் வரலாறு, தமிழின் தொன்மை, தமிழின் தனித் தன்மை ஆகிய இயல்பாக அமைந்த தமிழர் பெருமையையே தலைகீழாக்க ஆவனசெய்கின்றது. தமிழன்குடரை நோக்கிப்பாய்கின்றது தில்லிக் கழுகின் கூரிய அலகு.

அதுஎன்ன நினைக்கிறது? தமிழகத்தில் நாலைந்து பேர்களைக் கையில்போட்டுக்கொண்டு நாலுகோடி மக்களையும் வேண்டியபடி சுரண்டி ஒழித்துவிடலாம்.

இதுபகற்கனவாகத்தான் போகும். இன்று தெரியாது. இன்னும் சில நாட்களில் தெரிந்து கொள்ளும் தில்லிக் கழுகு.

ஆகாஷ்வாணி என்றான் ஒரு முட்டாள்! வானொலி யிருக்க ஆகாஷ்வாணி என்னடா என்று கேட்டால், திருந்தவேண்டுமே. தில்லியின் துணைகொண்டு ஆகாஷ்வாணி என்றுதான் சொல்லுவேன் என்கின்சின்றான் அந்த முட்டாள்.

தமிழர்களின்உணர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகின்றோமே, இதனால் தமிழர்களையே இழந்துவிட நேர்ந்துவிடுகின்றதே என்று அஞ்சுகின்றதா கழுகு. சிறிதுமில்லை.

திருச்சி வானொலி நிலையத்தின்முன் இளவழகன் உண்ணா நோன்பு மேற்கொண்டார். அவரை, ஆகாஷ்வாணி கைவிடப் படும்என்று நம்பவைத்தது தவிரக் கழுகின்பிடி சிறிதும் தளர்ந்தபாடில்லை.

இதோ சென்னைவானொலிநிலையத்தின்முன்பு அரங்கரத்தினம் உண்ணாநோன்புதுவங்கி இன்று (31-1-59) பத்து நாட்கள் ஆகின்றன. உயிர் தத்தளிக்கின்றது தமிழன்பர்க்கு! அவர்கேட்பதெல்லாம் ஆகாஷ்வாணி வேண்டாம். வானொலியே வேண்டும் என்பதுதான்:

அரங்கரத்தினம் சாகத்தான் வேண்டுமா? அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கும் தீயர்கள் வாழத்தான் வேண்டுமா?

அரங்க ரத்தினம் சாவு என்ன செய்துவிடும் என்று எண்ணலாம் ஆட்சியாளர், என்ன செய்து விடும் என்று எண்ணலாம் தில்லிக் கழுகு. அண்மை எதிர்காலமே இதற்கு நல்ல பதில் கூறத்தான் போகின்றது.

தமிழுணர்ச்சியைச் சிறிதென எண்ணி விடாதே தில்லிக்கழுகே: உன்னைக் காத்துக் கொள்ளமுடியாது. ஆகாஷ்வாணியைக்கைவிடு! அஞ்சு. நடுங்கு!

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி உச.

(சென்றகுயிலில் வந்தபகுதி காட்சி உங என்று திருத்திப் படிக்க)

இடம் : பிசிர் என்னும் ஊரினின்று நகருக்கு வரும்வழி.

காலம் : முன்னிரவு.

உறுப்பினர் : பாண்டியன், படைத்தலைவர் புலவர்கள், ஒற்றன்.

காட்சித் தலைப்பு:

அமிழ்தும், பாட்டும்

நிகழ்ச்சி : அன்னச் சேவல் என்னும் பிசிராந்தையார் பாட்டைக் கேட்டுத் திரும்பும் பாண்டியன் முதலியோர் அப்பாட்டின் அருமையை வியக்கின்றார்கள்.

பாண்டியன் : அன்னச்சேவலே! நீ குமரிப் பெருந்துறையிலுள்ள அயிரை மீன்களை நிறைய உண்டு வடதிசைக்கண் இமய மலைக்குப் போகின்றாய் என்றால் இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாகிய நல்ல சோழ நாட்டின் உட்சென்று பொருந்தினால். உறையூரின்கண் உயர்நிலைமாடத்திலேஉன்பெட்டையோடுதங்கி வாயில் காவலர்க்குச்சொல்லவேண்டுமே என்று கூட எண்ணாமல், தடையில்லாமல் கோயிலினுட் புகுந்து பெருங் கோவாகிய கிள்ளி கேட்டால் நான் பெரிய பிசிர் என்னும் ஊரின் கண் உள்ள ஆந்தையுடைய அடியேன். என்று சொல்லிவிட்டால் மாட்சிமை உடைய நின் பேடை பூணத் தனது நல்ல அணிகலத்தை அளிப்பான்.

என்பதன்றோ பாவேந்தர் பாட்டின் கருத்து! கோப்பெருஞ் சோழனை எவ்வளவு மேலாக மதிக்கின்றார் பாவேந்தர்! பாவேந்தரின் மதிப்பைப்பெற்ற கோப்பெருஞ்சோழன் எத்துணை நற்பண்புடையவனாயிருக்கவேண்டும் அப்பெரியோனா இங்ஙனம் வஞ்சப் போர்க்கு முந்துவான்?

அமைச்சர்: ஒருபோதுமில்லை.

செல்லுகின்றார்கள்தேரில்! அங்கு ஒருபுறம் கோப்பெருஞ்சோழனின் உருவைச் சூழ்ந்து பலர் நிற்கின்றார்கள் அவர்கள் பாண்டியன் தேர் நெருங்குவது கண்டு சோழன் வீழ்க.

பாண்டியன்: சோழன் வாழ்க. மற்றோரிடம்

கூட்டம்: இகழத்தக்க சோழன்

பாண்டியன்: புகழத்தக்க கோப்பெருஞ் சோழன்.

வரும்போது இகழ்ந்தான் பாண்டியன் சோழனை. போம்போது புகழ்ந்தான் பாண்டியன். அதே சோழனை.

மக்கள் சோழன்மேற் கொண்ட வெறுப்பு விருப்பாக மாறுகின்றது.

புதுவையில் 11 – 1 – 59 ஞாயிறன்று நடந்த தி. க. பொதுக்கூட்டத்தின் போது நாம் தமிழர் இயக்கத்தினரால் குயில் வளர்ச்சிக்கென ரூபாய் ஒன்று அளிக்கப் பட்டது, பெற்றோம். நன்றி!

—அமைச்சர்.

தமிழகப் புலவர் குழு.

குழுவின் நாற்பத்தொன்பதின்மரின் பெயர்கள் அகரவரிசைப்படி தரப்படுகின்றது.

வித்துவான், மு. அருணசலம்பிள்ளை.
,, வே. அய்யாநாயக்கர்.
,, அன்பு, கருணையானந்தா.
கா. அப்துல்கபூர் M. A.
கா. அப்பாத்துரை M.A.L.T.
பூ. ஆலாலசுந்தரம்செட்டியார். M. A.
சரவண ஆறுமுகமுதலியார். M. A. B. O. L.
கி. இராமலிங்கனர். M. A.
டாக்டர், மா. இராசமாணிக்கனர் M.A.Phd.
சி. இலக்குவனர். M. A. M. O. L.
வித்துவான், மு. இராகவையங்கார்
லெ. ப. கரு. இராமநாதன்
கவிஞர், நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை
வித்துவான், ந. இராமநாதன்.
இராமசாமி அடிகள்.
,, ஐயன்பெருமாள்கோனர்.
பண்டிதர். அ. கந்தசாமிபிள்ளை.
அ. காமாட்சி குமாரசாமி M. A.
வித்துவான், சங்கரநாராயணர்.
பண்டிதர். சங்குப்புலவர்.
T. V. சதாசிவபண்டாரத்தார்.
புலவர், அ. மு. சரவணமுதலியார்.
டாக்டர், அ. சிதம்பரநாதன் M. A. Phd.
தி. சிவப்பிரகாச சேதுராயர்.
புலவர், மயிலை. சிவமுத்து.
கோ. சுப்பிரமணியப்பிள்ளை. M. A. B. L.
இ. மு. சுப்பிரமணியப்பிள்ளை.
டாக்டர், ரா. பி. சேதுப்பிள்ளை B. A. B. L.
ப. சோதிமுத்து M. A. B. D.
,, ச. சோ. பாரதியார்.
ஞா. தேவநேயப்பாவாணர் M. A.
,, மொ. அ. துரைஅரங்கனர் M. A. Phd.
வித்துவான், ம. துரைசாமிஐயர்.
ஔவை துரைசாமிபிள்ளை.
வித்துவான், நயினர்முகமது:
பரலி, சு. நெல்லையப்பர்.
அ. மு. பரமசிவானந்தம் M. A. M. Lit.
அ. கி. பரந்தாமனர் M. A.
வித்துவான், தி. பட்டுச்சாமி ஓதுவார்.
புரட்சிக்கவிஞர். பாரதிதாசனர்.
டாக்டர், வ. சுப. மாணிக்கம் M.A.Phd.
கவிஞர், M. P. மாஸ்கரேனஸ்.
மேரி. மாசிலாமணி அம்மையார் M. A.
வித்துவான், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.
தெ. பொ. மீனட்சிசுந்தரனர் M. A. M. O. L.
டாக்டர், மு. வரதராசனர் M. A. Phd.
வித்துவான், க. வெள்ளைவாரணர்.
,, வேங்கட்ராமஐயா M. A. B. O. L.
,, மெ. வீ. வேணுகோபால்பிள்ளை

இப்பெயர்ப் பட்டியலில், சிறிது மாறுதல் ஏற்படலாம் அடுத்த குயிலில் தெரிவிக்கின்றோம்.

★ ★

தேவை

"குயில்" விற்பனையாளர் இல்லாத ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு;

அமைச்சர்
குயிலகம், புதுச்சேரி.

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா?

கயல்விழி.

பார்ப்பனர்கள் தமிழர்களை வென்று உயர்ந்து வாழுகின்றமைக்கு ஏதுக்கள் பல. அவற்றுள் சிறப்பானது, தமிழ் மொழிக்கும் மக்கட்கும் தொண்டு செய்வதாகப் புறத்தே காட்டி, உண்மையில் பார்ப்பனர்களாகிய தங்களை நூல்களிடத்து உயர்த்தியும், ஏனைய மக்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணி நினைத்துப் போற்றி மகிழ்ந்து உயர்ந்தேத்த என்னென்ன வழிவகைகள் உண்டோ அவற்றையெல்லாம் எஞ்சாது செய்துவிட்டுச் சென்றிருப்பதும் ஆகும். இதுபற்றிய கீழ்வரும் தேவநேயப்பாவாணர் அவர்களின் உரையை எண்ணுக.

"தமிழையும் தமிழரையும் கெடுத்தோருள் பலர் பாட்டும் நூலும் உரையும் இயற்றியிருத்தலால் தமிழை வளர்த்தார்போல் தோன்றுவர். ஆனால் ஆராயின் அவர் வருவாய்ப் பொருட்டும், வட சொற்களையும் ஆரியக் கருத்துக்களையும் தமிழ் நூல்களிலும், வடநாட்டுப் பார்ப்பனரைத் தமிழ்நாட்டிலும் புகுத்துவதற்கும், பார்ப்பனக்குலத்தை உயர்த்துவதற்குமே அங்ஙனம் செய்தனர் என்பது புலனாகும்" (ஒப்பியன் மொழிநூல் பக்: 45)

நச்சினார்க்கினியர் பழம்பெருந் தமிழ் நூல்களுக்கு உரையெழுதிச் சென்றிருக்கின்றாரென்றால் அது தமிழ் மொழிக்குத் தொண்டு பல செய்வதாகப் புறத்தேகாட்டி உண்மையில் வாய்த்த இடங்களிலெல்லாம் தங்கள் நலனுக்கு ஆக்கமூட்டும் வகையிலும், தங்கள் கொள்கை, சாதி மதம், வேள்வி ஆகியவைபற்றி நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைத்துக் காட்டுவதற்குமே என்பதை அறிதல் வேண்டும்.

"ஐவகை மரபின் அரசர்பக்கமும்" என்பது தொல்காப்பியப் புறத்திணையியலில் அமைந்துள்ள 85-வது சூத்திரத்தின் இரண்டாவது அடியாகும்.

இந்த அடிக்கு நச்சினார்க்கினியர் கூறிச்சென்றிருக்கும் உரையை ஈண்டுக்கூர்ந்து நோக்கி நுனித்து ஆய்ந்துபார்த்தால் யான் மேலே நச்சினார்க்கினியர்பற்றிக் கூறியது சரியா? தவறா? எனத் தெள்ளிதின் விளங்கும்.

"ஐவகை மரபின் அரசர் பக்கமும்" என்பதற்கு நச்சினார்க்கினியர் உரை:

'ஓதல்' வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ் செய்தல் என்னும் ஐவகை யிலக்கணத்துடைய அரசியற் கூறும்" என்றுகூறிவிட்டு மேலும்விளக்கம் கூறுகிறார்.

"பார்ப்பார்க் குரியவாக விதந்த வேள்வியொழிந்த வேள்விகளில் இராயசூயமும், துரங்க வேள்வியும் அரசர்க்குரிய வேள்வியாம்"

இவற்றிலிருந்து பார்ப்பார்க்குரிய வேள்வியை மற்றவர்கள் செய்தல் கூடாது என்பதைக் காட்டி, அரசர்க்கெனத் தனி வேள்வி வகுத்து அதன்மூலம் அவர்களிலிருந்து தங்களை உயர்த்திக் கொண்டமையை எண்ணுக.

வேட்டலுக்கு விளக்கம்தந்தவர் ஈண்டு ஈதலுக்கு விளக்கம் தருவதை எண்ணுக.

"கலிங்கங் கழுத்து யாத்துக் குளம்புங், கோடும் பொன்னணிந்த புனிற்றுநிரையுங், கனகமும் கமுகு முதலியனவும் அன்னமும் செறிந்த படப்பைசூழ்ந்த மனையும், தண்ணடையும் (நன்செய் நிலம்) கன்னியரும் பிறவுங் கொடுத்தலும் அவர்க்குரிய கொடையாம்:

மேற்கண்ட இவ்வளவையும் பார்ப்பனன் அல்லாத ஒருவன் பெற்றுவிடுவான் என்றெண்ணி "ஓதுவித்தலும் வேட்பித்தலும் ஏற்றலும் அந்தணர்க்குரிய" என்று விளக்கம் நல்கி தன்னினத்தாரே அவற்றைப்பெற வழியுந் துறையும் வகையாய் அமைத்துக்கொண் டிருத்தலையும் ஊன்றி உணர்க.

பொன்னணிந்த புனிற்றுநிரையும் கனகமும் நன்செய் நிலமும் ஆகிய இவை நிறைவுபடாத ஈகையாம். பார்ப்பனர்களுக்கு மேற்கண்ட இவைகளுடன் இன்னும் ஒன்றைச் சேர்த்து ஈதல் வேண்டுமாம். அது என்ன?

வயதும் வளப்பும் ஒருங்குகூடிச் சுவைப்பதற்கு ஏற்றமுறையில் உரு நலஞ் சிறந்து, எழில் நலங் கனிந்து, மேனி மெருகேறி பெண்மை நலமனைத்தும் உருண்டு திரண்டு ஓரமைவாய் நிற்கும் தனிநிலை கன்னியெனப்படும்.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

தேவர்

இது வடசொல் அன்று. தெவ்வுப் பகை யாகும் என்ற (தொல் உரி நசசக) செய்யுளால் தெவ் என்பது பகை என்ற பொருளுடையது என்பதை அறிந்துகொள்க. தெவ் என்பது முதனீண்டு அர் இறுதிநிலை பெற்றது. எனவே தேவர் எனில் பகைவர் என்பதே பொருள். தெவ் என்பதே தே என்றும், தேவு என்றும் வருவதுண்டு. தேவன் என்பது ஆண்பால் ஒருமை; இதன் பெண்பாலே தேவி என்க. தேவி என்பதுகூட வடமொழி என்றே ஏமாற்றுவர். தே என்பதும் அப்படித்தானும்! தேவு என்பதும் அப்படித்தானும்!

தேவன் பகைவனு - தேவர் பகைவரா என்ற வினுவுக்கு விடைகாண்போம்.

அறிவு நிரம்பாத நாளில், மழையையும், வெயிலையும், காட்டாற்றையும், காட்டுக் கனலையும் தெவ் என்றும் தெய் என்றும் பெயரிட்டு அழைத்தான் தமிழன். அறிவுபெற்ற நிலையில் அவற்றின் அருமை தெரிந்து அற்றை வாழ்த்தலானுன், தெய் என்றும் தெவ் என்றும் கூறி வெறுத்த செங்கதிரையும் திங்களையும் செங்கதிர் போற்றுதும், திங்களைப் போற்றுதும் என்றெல்லாம் கூறியது கேட்டோமன்றே.

தெவ் என்பதன் அடியாகப்பிறந்த தேவன் தேவர், தே, தேவு எனபன. கண்ணையும் மனத்தையும் கவர்வனவற்றையும் பயன்படு பொருள்களையும் குறிப்பனவே என அறிக. எனவே இவை தூயதமிழ்க் காரணப்பெயர்கள்.

□ட

இப்படிப்பட்ட கன்னிபொருத்தியையும் பார்ப் பனனுக்கு ஈதல் வேண்டுமாம். அப்பொழுதுதான் நிறைவுபட்ட ஈகையாகுமாம். பார்ப்பனரின் பெண் ணுசையும் காமுகத் தன்மையும் எத்தன்மையது என்பதை இதன்மூலம் அறிந்துகொள்க.

ஈதலுக்கும் ஏற்றலுக்கும் இவ்வளவு விதியும் வரம்பும் அமைத்து, அதை உலகொடுபட்ட வழக் காக்கித் தமிழ் அரசர்களை ஏமாற்றிப்பெற்று உண்டு கொழுத்துவரும் இவர்களைக்கண்டு "பார்ப்பானில் ஏழையுமில்லை; பறையனில் பணக்காரனுமில்லை" என்னும் பழமொழி எழுந்ததில் வியப்பொன்றும் இல்லை.

ஐவகை மரபின் அரசர் பக்கமும் என்பதில் உள்ள வகை என்ற சொல்லுக்கு கீழ்கண்டவாறு உரை வகுக்கிருர்.

"வகையென்றதனுனே களவு செய்தோர் கையிற் பொருள் கோடலும், ஆறிலொன்று கோடலுஞ் சுங்கங் கோடலும். அந்தணர்க்கு இறை யிலி கொடுக்குங்கால் இத்துணைப் பொருள் நும் மிடத்து யான் கொள்வலெனக் கூறிக் கொண்டு அதுகோடலும் மறம் பொருளாகப் பகைவர் நாடு கோடலுந் தமரும் அந்தணரும் இல்வழிப் பிறன்றுயங் கோடலும் ... ..."

"கோயிற்றெழில், கொடை பெறல், புரோகிதம், வேள்வி, பட்ட விருத்தி முதலிய வற்ருல் செல்வப் பெருக்கும் பார்ப்பனருக்கு உண்டாயின" (தேவ நேயப் பாவாணர். ஒப்பியன் மொழிநூல் பக் 51)

"ஆரியர்கள் என்றைக்கு இந்த நாட்டில் காலெடுத்து வைத்தார்களோ அன்று முதல் தமி ழையும், தமிழரின் கலையையும், கலாச்சாரத்தையும் ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிருர்கள்" (17—7—48 இந்தி எதிர்ப்பு மா நாட்டில் மறைமலையடிகள்)

"பிராமணர் அரசர்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு பொதுமக்கள் எதிர்த்து நின்ற பல செயல் களில் வெற்றியடைந்தார்கள்" (William Howitt. Popular History of priest craft in all ages and nations. Page 85)

இந்த எடுத்துக்காட்டுகளுடன் நச்சினுர்க்கினி யரின் உரையை மருங்கு வைத்து ஒருங்கு நோக்கி உண்மை அறிக.

<0>

நூல் நிலையம்

(சென்னை. வே. தில்லைநாயகம். எம். ஏ.)

அறிவு பெருகிட ஆர்வ மூட்டிட
அமைந்த நூல்நிலையம்! - இது
அமைந்த நூல்நிலையம்!

கற்பனைக் கவிஞரும் காரிய வீரரும்
கருதும் நூல்நிலையம்! - தேடிக்
கருதும் நூல்நிலையம்!

நல்லவர் பெரியவர் நங்கைய ராடவர்
நாடிடும் நூல்நிலையம்! - விரும்பித்
தேடிடும் நூல்நிலையம்!

நூல்கள் வழங்கி நூலகர் உதவிட
நன்றே பணிபுரியும்! - என்றும்
நின்றே பணிபுரியும்!

அலையும் கடலையும் ஆகாய மீனையும்
அளக்க உதவுமிது! - தரையில்
விளக்க உதவுமிது!

வேலைக் குறிப்பும் வேண்டிய பிறவும்
விரும்ப ஈயுமிது! - நாம்
விரும்ப ஈயுமிது!

குருடரும்! செவிடரும் கூடிப் படித்திட
ஓடிப் பணிபுரியும்! - தேடி
நாடிப் பணிபுரியும்!

மருளும் உள்ளமும் மயங்கிய அறிவும்
தெளிய உதவுமிது! - அறிந்து
தெளிய உதவுமிது!

ஓவிய மிங்குண்டு காவியமிங் குண்டு
ஓராயிரம் வகையில்! - பன்
னூராயிரம் வகையில்!

தாவி யோடிடும் தம்பியர் தங்கையர்
தானே வருவரிங்கு! - படிக்கத்
தானே வருவரிங்கு!

இத்தரை அறிவொளி எல்லாம் காண
இங்கே வழியுண்டு! - அறிவீர்
இங்கே வழியுண்டு!

அறிவியல் சித்தியல் அரசியல் பொருளியல்
அத்தனையு முண்டு! - இன்னும்
எத்தனையோ உண்டு!

அத்தகு வாய்ப்பு அனைவரும் கொள்ள
அமைந்த நூல்நிலையம்! - இது
அமைந்த நூல்நிலையம்!

செறிந்த அறிவு சிறக்கும் வகையே
செய்யும் நூல்நிலையம்! - ஆமாம்
செய்யும் நூல்நிலையம்!

★○★

வெற்றி அதோ செல்லடா!

பாவலர், பாலசுந்தரம்.

அமைப்பு:- "சத்தியமே லட்சியமாய்" என்ற மாதிரி

நற்றமிழா! வெற்றி அதோ செல்லடா!
நம் தலைவர் முறையறிந்து வெல்லடா! (நற்)

ஒற்றுமையாய் நின்றறப்போர் வழியிலே - சுய
உரிமை பெற்று அரசமைப்போம் புவியிலே
எத்திசையும் போற்றும் வீர மறவனடா - நீ
ஏமாந்த காலம் போதும் எழுந்திரடா - (நற்)

புல்லுருவிக் கூட்டம் நின்று புலம்பிடும் - உன்
போர் முறையைக் கண்டு அஞ்சி வெதும்பிடும்
வல்லவனே துள்ளிவெற்றி அடைந்திடடா - இங்கு
வலிவமைந்த சுதந்திரத்தை அமைத்திடடா (நற்)

அமைப்பு:- "வீடுநோக்கி ஓடிவந்த" என்ற மாதிரி

நாடு கெட்டுப் போனது இந் நாளிலே - இதற்கு
ஈடு செய்யச் சேருவீர் நற்போரிலே, வாழ்விலே
(நாடு)

ஓடெடுத்தா வாழ்ந்தார்? - தமிழ் உயர்குடியில் [பிறந்தார்!
பாடுபட்டும் பயனில்லாது பஞ்சை போலத் [தாழ்ந்தார்
நிலமிருந்தும், நீரிருந்தும் நாட்டிலே - சுய
நிலையிழந்தார், நினைவிழந்தார் கேட்டிலே (நாடு)

கலையும் மாண்ட தந்தோ தமிழ்க் கவியும் [மாண்டதந்தோ!
பழிசுமந்தே வழியழிந்தே நிலை குலைந்தார்]அந்தோ!
இனி இருந்தும் என்ன, இறந்தும் என்ன [நாட்டிலே! - ஒரு
இறுதி காண உறுதிகொள்வோம் வாழ்விலே!
(நாடு)

அமைப்பு:- "எளியோரைத் தாழ்த்தி" என்ற மாதிரி

பெரியோர்கள் பேணும்
தொழிலாளர் கோரும்
நிலையான வாழ்வும் வாராதோ!

வெறியாளராலே பறிபோன நாடு
விதிமாறி நாம் ஆளும் கதிசேராதோ! [பெரி]

ஒரு வேளை ஆற உணவே இல்லாது
உருமாறி நாமும் உயிர் மாள்வதோ?
இருந்தாலும் ஒன்றே, இறந்தாலும் ஒன்றே.
என நின்று வெல்லும் முறை நாடாதோ! [பெரி]

◁□▷

சென்ற இதழ்த் தொடர்ச்சி

தமிழர் தலைவர்

தஞ்சை நெடுமாறன்

ஆனல் போகூழ் பிடித்த இந்நாட்டு மக்கள் தமக்கென்று ஏற்பட்ட ஒரு தனிப்பெருந் தலைவரை மெய்யாய வழிகாட்டியை உணராமல் இன்னமும் செம்மறியாட்டுக் கூட்டங்கள் போலவே வாழ்கின்றனர். தள்ளாத வயதிலும்-நோய் நொடிகளால் இன்னல்பட்டும் சளைக்காது ஒப்பற்ற தொண்டாற்றும் பெரியாரவர்களின் விழுமிய பணியைப் பயன்படுத்துவதில்லை. இன்னமும் அவர் அணிந்திருக்கும் 'ஹிரண்யா பெல்டை' அவிழ்த்தால் சீழ்வரும்.திடீரென்று பலவேலைகளில்கடுங்காய்ச்சல் தலைவலி, வயிற்றுப்போக்கு வந்து தொல்லை கொடுக்கும். அமைந்த துயிலும் கிடைக்காது, ஏனிந்த நிலை? செல்வரின் செல்வராக வாழ வேண்டிய ஒரு மாபெரும் தலைவரை இந்த நாட்டு மக்கள் இன்னமும் உணராமல், அவர் வழி நடவாமல் இருப்பது வெட்கக்கேடு அன்றோ? அதிலும் அவருக்கு - அவர் தொண்டிற்கு இடையூறு செய்வதற்கென்றே தோன்றிய சில துரோகக் கும்பல்கள் இன்னும் நாட்டில் நடமாடுவது மிக மிக மானக்கேடும், வெட்கக்கேடும் அல்லவா? வெளிநாட்டான் இதைத் தெளிவாக உணர்ந்தால் காறி உமிழ்வானே "நீங்கள் மண்துலங்கினல்கூட துலங்கமாட்டீர்கள்" என்று 'சாபக்கேடு' தருவானே! தமிழர் நலமே தந்நலம் என்று ஓயாது ஒழியாது உழைக்கின்ற ஒரு பெருந் தலைவரைப் பயன்படுத்தாத, நன்குணராத இந்த மன்பதையும் ஒரு மன்பதையா? இதை நன்றிகெட்ட சமுதாயம், காட்டுமிராண்டிச் சமுதாயம், உருப்படவே முடியாத அழுகல் சமுதாயம் என்றுதானே சொல்ல முடியும். இன்னும் ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு இவர் தோன்றியிருப்பாரேயாகில்-இந்தச்சமுதாயம் அழுகி நாற்றமெடுத்துப் போய்ச் சாக்கடைப் புழுவாய் ஆகி, 'ஒன்றுக்குமே திருத்தப்படமுடியாத உதவாக்கரைச் சமுதாயம்' என்று மற்றநாட்டார் காறித்துப்பும் நிலையேற்பட்டபிறகு தோன்றியிருப்பாரேயாகில் அப்போதுதான் இவர் பெருமையும், தொண்டின் விழுப்பமும் உணரப்பட்டிருக்கும்.

நேற்றுவந்த ஒரு சுண்டைக்காய் இனம் - 'சீசீ!' என்று மற்றவர்கள் இகழ்ந்து ஒதுக்கிய இனம் - இலக்கிய வளமோ, வரலாற்றுப் பெருமையோ, கலைவளமோ, தொல் புகழோ, சிறப்போ எதுவுமே இல்லாத, கல்வியறிவு வாடைகூடச் சரியாகப் படாத ஓர் இனம் - நீக்ரோ இனம் இன்றைக்கு விடுதலை அடைந்து உலக அரங்கிலே பீடுற மிளிர்கிறது. வேற்று நாடுகளிலே அதன் தூதுவர்கள் நடைபோட்டுப் புதியதொரு சிறப்பமைந்த சூழ்நிலையை உண்டாக்குகின்றனர். இந்நிலை எப்படி ஏற்பட்டது? அவர்களின் ஒற்றுமையுணர்ச்சி! ஒரே தலைமையின்கீழ் ஆட்பட்ட தன்மை! கட்சிபேதமற்ற நிலைமை! நாட்டை விடுதலைபெறச் செய்ய வேண்டும் என்று ஒன்றிய உரிமையுணர்ச்சி! நெக்ரூமாவின் தலைமையிலே கிளம்பிய படை வெள்ளையரின் ஆதிக்கப் பீடத்தைத் தகர்த்தெறிந்து வெற்றிகண்டது; தனிக்கோட்டை கட்டித் தன் கொடியைப் பறக்கவிட்டது.

மேலைநாட்டுக்காரர்கள் ஆடையில்லாமல் காட்டுமிராண்டிகளாய் அலைந்த போது நாகரிகத்தின் உச்சியில் வழ்ந்தது தமிழகம், என்று விவேகாநந்தர் போன்றோரால் சிறப்பிக்கப்படுமளவு நாகரிகபண்பாட்டு உயர்வும், உலக இலக்கியங்களிலே சிறப்பும் தொன்மையும் வாய்ந்த இலக்கியமும், மனிதனின் முதல் மொழி தமிழ் என்று போற்றப்படும் மொழியும். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்பிறந்த மூத்த குடியும் கொண்ட தமிழர்கள் - இந்தியாவில் தன் ஆட்சியை அடிகோலிய அசோகப் பேரரசனும் அஞ்சி நடுங்கிய தமிழர்கள் இன்று வடக்கர் தளைக்கு ஆட்பட்டிருப்பதேன்? ஆண்ட இனம், ஆண்ட பரம்பரைசோற்றுலடித்த பிண்டங்களான வடக்கர் ஆட்சிக்கு அடிபணிந்ததேன்? முடிகுனிந்ததேன்? ஒற்றுமை யுணர்ச்சி யில்லை! தன்மான உணர்ச்சி இல்லை! தலைவர் பெரியாரின் கீழ் திரண்டெழவில்லை! பலகட்சிகளாகப் பிரிந்திருக்கிறது. தமிழர் வாழ்வை யழிப்பதையே தொழிலாகக் கொண்ட மாய்மாலப் பிஞ்சில் பழுத்த பழங்களுக்குப் பின்னல் சுற்றுகின்றது. மானமும், விடுதலை யுணர்ச்சியும் இருந்தால் தமிழினம் தமிழர்தம் பகைவரைப் பின் தொடரலாமா?

நன்றி கெட்ட இந்த நாட்டிலே தான் தமிழர் தலைவருடைய துரோகிகளுக்கு - விடுதலை இயக்கத்துப் பகைவர்க்கு மாலையிடப் படுகின்றது. மங்கல வாழ்த்துப் பாடல் பாடப் படுகின்றது. மயங்கும் அளவுக்கு வரவேற்புக் கிடைக்கிறது. ஓநாய்க் கூட்டத்திற்கு ஆட்டுக் கூட்டம் வாழ்த்துப் பாடும் படுமோசமான நிலைமையை இந்த ஒரு நாட்டில் மட்டுமே தான் காண்கின்றோமே யொழிய - காண முடியுமே யொழிய மேலை நாடுகளிலே பேச்சுக்குக் கூட சொல் கிடையாது; ஆள் கிடையாது.

தமிழ்த் தாயின் முறையீடு

வி. பொ. ப. வேலன். அறந்தாங்கி.

அன்பும் பண்பும் அமைந்த மைந்தரீர்!
என்பும் உருகும் செய்தி யறியீரோ?
நண்பர் போன்ற நயவஞ் சகர்பலர்
வம்பர் வடநாட் டாளுநர் தமக்குக்
கங்காணி யாயெனைக் காட்டிக் கொடுத்தே
இந்தி யென்னும் இழிமகள் தன்னை
வந்தித் தென்னை விரட்ட வழிதான்
செய்து வருவதோர் செய்தி யறியீரோ?
அஞ்ச லகத்தும் அலுவ லகத்தும்
பஞ்சைக ளுள்ள பள்ளி யகத்தும்
சிற்றூர் களிலும் பேரூர் தன்னிலும்
கணக்கினை எழுதும் கணக்க ரிடத்தும்
வானொலி நிலையம் வண்டமிழ் நிலையம்
யாண்டும் இந்தியை யாவரும் ஏற்கப்
பொருந்தா வகையில் புகுத்து கின்றனர்.
மறைமுக மாக உங்களை ஏய்க்க
கட்டாய மில்லை என்று கழறி
திரைமறை வினில்தான் தீவிர மாக
வேலை செய்து விரைந்து நுழைத்தே
என்றன் தூய்மை என்கன் னித்தனம்
யாவும் கெடுத்தே; எனது நாகரிகம்
தானும் கெடுக்கத் தயங்கார் தில்லியார்.
என்றன் மக்கள் ஏனைநா டுகளில்
இன்னல் உறுவதை ஏனோ அறிகிலர்?
பசிப்பிணி போக்கும் வகையைப் பாரார்,
திட்டம் வகுத்துத் தீர்க்க முயலார்.
உலகம் ஏற்கா உறுப்படா இந்தியை
வேண்டார் மீது வீணே நுழைக்கிறார்.
என்மகார் சில்லோர் கங்கா ணிகளாய்
இருந்து கொண்டே எனக்கிடை யூறுகள்
ஏனோ? செய்கிறார் எரிகிற தென்னுளம்
இந்தி வந்தால் என்றன் நிலைமை
யாதா குமென எண்ணிலார் என்மகார்.
தீதாகு மன்றித் தெளிவே இல்லை.
யானும் அழிந்தேன் பண்பா டழிந்தே
என்மக் களெலாம் எல்லா வகையிலும்
அன்னியர் தங்கள் அநாக ரிகத்தை
ஏற்பதும் உறுதி. ஆதலின் இங்கிலை
நேரா வண்ணம் நேரிய மக்காள்!
சீரிய முறையில் ஆரிய மொழியை
அண்ட விடாமல் தண்டம் கொடுத்தே
ஒண்ட விடாது ஓட்டுவீர் இன்றே!
தமிழர் எவரும் தான்பயி லாது
சட்ட மறுப்பு இன்னே துவக்குவீர்!
இன்றேல் யானும் என்றன் நாடும்
அழிந்தும் ஒழிந்தும் அவல முறுவோம்.
பிறமொழிக் கலப்பால் பேதமே யுற்றேன்.
ஆங்கிலக் கலப்பால் அவதி யுறுகிறேன்.
இனியும் இந்த இந்தி அரக்கியால்
என்ன தீங்கு நேருமோ அறியேன்.
நாடும் மொழியும் இல்லா ஒருவன்
தமிழன் என்று தான்சொலல் உண்டோ?
இந்தி பரப்பும் என்னுடை மக்காள்
என்னை வடக்கே இட்டுச் சென்றிலர்,
வடவர் கையில் என்னையொப் பித்துக்
கைக்கூ லிபெறும் கயவரா என்மகார்?
இல்லை! இல்லை! இமய முதலே
தன்கொடி நாட்டும் தகைசால் வன்மையர்.
அன்னை துன்பம் அகற்றும் ஆண்மையர்.
அயர்ந்தும் இராது விரைந்தே அந்த
இந்தியை அரக்கியை விரட்டுவீர் உடனே
இல்லையே லிங்குநாம் இருப்பதும் அரிதே
தொல்லை மிகுமெனச் சொன்னேன் உண்மை.
மக்களே! உங்கள் மானம் போகும்.
பண்பா டெல்லாம் பறந்தே போகும்.
உங்கள் யாவர்க்கும் உரையில் மாற்றம்
உணவில் மாற்றம் உடையில் மாற்றம்
பெயரில் எல்லாம் பெரிதும் மாற்றம்.
எண்ணில் மாற்றம் எழுத்தில் மாற்ற
எல்லா மேஏ மாற்றம் பாரீர்!
என்னைக் காத்தே ஏற்றுவீர் அரியணை.
இந்தி யென்னும் இழிந்தோன் உமது
தாயை ஒழிக்கும் போது
நேயர் சும்மா நிற்பதும் என்னே!

எந்த நேரத்தில் தமிழினம் தன் நிலையை முழுதும் நன்குணர்ந்து பெரியாரவர்களின் தலைமையின் கீழ் ஒருங்கு திரண்டெழுகிறதோ, பெரியாரவர்களின் தொண்டின் மாண்பை உணர்ந்து ஈரோட்டுப் பாதையில் நடை போடுகிறதோ அன்று தான் தமிழக விடுதலை கிடைக்கும்; அன்று தான் தமிழ்க் கோட்டையில் தமிழ்க்கொடி பறக்கும்!

<O>

மருந்து

கரூர். கிருட்டினசாமி.

மன்னனுக்கு நோயென்ற செய்தி கேட்டு,
மருத்துவர்கள் வந்தார்கள்; சோதித் தார்கள்,
"திண்தோள்சேர் மன்னனுக்குத் தீங்கே யில்லை,
நோய்தீண்டும் அறிகுறியும் சிறிது மில்லை
உண்மையீ" தென்றுரைத்த உரையைக் கேட்டு,
சிற்றமிக எய்திட்டான்: உடனே அன்னோர்
சென்னியறச் செய்திட்டான்; சிலரைப் பள்ளிச்
'சென்றுபயின் றிடுக'என ஆணை யிட்டான்!

ஒருனொன்று மருத்துவர்கள் இருவர் வந்தார்:
உடல்மெலிந்தோன் நன்றாகப் படித்தோன்
[ஆவன்,
பருத்திருந்த மற்றவனோ சுவடி சற்றும்
பாராதோன்; பலபேரைக் கொன்றோன், ஆயின்
வருமானம் பெருவதில்தான் தேர்ந்தி ருந்தான்!
மன்னவனை அவ்விருவர் சோதித் தார்கள்.
'உருகியபொன் தேகத்தை உடையான் வேந்தன்
ஒருகுறையும் இல்லை"என்றான் மெலிந்தி
[ருந்தோன்

தலைவேறும் உடல்வேறும் ஆக்கு மாறு,
தண்டனையை அளித்திட்டான் இதனைக் கேட்டு
நிலைகுலைந்தான் பிரிதொருவன் நெடிதா ராய்ந்து,
"நிச்சயமாய்க் குணமாகும், ஓரி ராவில்
தலையாய இன்பத்தை உடைய மாந்தன்
சட்டைஅணிந் துறங்கிடுதல் வேண்டு" மென்றான்!
அலையாகத் திரிந்தார்கள் நாடு முற்றும்
"அந்தஒரு தனிமனிதன்" காண வில்லை!

எளியோர்கள் செல்வர்களா இருக்க வேண்டி
இசைந்தார்கள் செல்வர்தாம் 'எளியோர்' என்றார்!
துளியேனும் வறுமைத்தீ அணைய வில்லை!
துணியுமிலர் மக்களெலாம் நலிந்தார்! எங்கும்
அழுகுரலின் பேயாட்டம்! வாழ்க்கை ஓடம்
அவலத்தில் தவிப்பதனைக் கண்டார்! சாலை
வழியாகப் படைவீரர் சென்ற காலை
மகிழ்வோடு யாசிப்போன் பாடக் கண்டார்!

படைவீரர் அப்பாதை வெற்றி சேர்க்கும்
பாதைஎன மகிழ்ந்தார்கள்! இன்ப மெல்லாம்
உடையவன்ஆம் எனநினைத்தே அவன்பால்
[சென்றார்
'ஓரிரவு அணிந்துகொள உனது சட்டைக்

பிரிந்திடவே வேண்டும்.

(இர. மணியரசு)

எடுப்பு

பிரிந்திடவே வேண்டும் - தென்னாடு
பிரிந்திடவே வேண்டும் - தமிழ்நாடு
பிரிந்திடவே வேண்டும்!

உடன் எடுப்பு

உரிமையுடன் நாமும் உலகினிலே வாழ
உள்ளமெலாம் ஒன்றி ஒற்றுமையாய்த் திகழ

(பிரிந்திடவே)

அடிகள்

துறைதோறும் நந்தமிழ் குறைவின்றி தோன்றிடத்
துயர்தரும் அயலார் தொடர்பதும் நீங்கிட
நிறைந்திடும் துன்பம் யாவுமே விலகிட
நித்தமும் நம்வாழ்வில் இன்பமே பெருகிட

(பிரிந்திடவே)

கடனாக உதவிடில்யாம் நூறு பொன்னைக்
களிப்போடு நல்கிடுவோம்!" என்றார், அன்னோன்,
"கடவுளும்என் நிலையறிவான் உடலை மூடக்
கந்தையில்லை! 'எனஉரைத்தே நகைத்தான்
[மேலும்!

சீரழிந்த மாந்தர்களின் துன்பக் காட்சி
சிங்கார மாளிகையில் வழ்ந்த மன்னன்
பார்வையினைத் தொட்டதடா! பதைத்தான், 'மிக்கப்
பழிசெய்தேன்: வீணாக நாள்க ழித்தேன்;
நேராக மக்களுடன் தொடர்பு கொண்டு,
நிறைஉழைப்பை மேற்கொள்வேன்; என்று
[ரைத்து,
சாரளங்கள் திறந்துகதிர் ஒளியை எங்கும்
தவழும்வணம் செய்தான்! பின் நலம டைந்தான்!

(ஒரு ஆங்கிலக் கவிதையின் தழுவல்)

வெண்பா வினாவிடைப் பகுதி

வினா: *முதலிரண்டு அடிகள்.* **விடை:** *ஈற்றிரண்டடிகள்.*

வினா: சிந்தாமணி, நாமக்கல். **விடை:** சித்தன்

செந்தமிழர் தொல்லையினில் சிக்குவதேன்; வந்தமொழி
இந்தியினா லா? ஆங் கிலத்தாலா? – இந்தியினால்,
ஏதுபயன்? செந்தமிழர்க் கின்னல்தான்! ஆங்கிலமோ
ஓதுகலை மிக்க துணை

வினா: இராதா திருச்சி. **விடை:** பா. முத்து

கிட்டுங் கனிகசந்து கிட்டாக் கனிதன்னை
எட்டும் நினைப்பும் இனிப்பதேன்? – முட்டியும்
கொள்ளரிய ஒன்றையே மேலாகக் கொள்கின்ற
கொள்கைநாம் கொள்வதால் தான்.

வினா: கோ. சுரேந்திரன் சிதம்பரம். **விடை:** சித்தன்

உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குகின்ற
தெள்ளுதமிழ் நூல்யாதோ தீட்டிடுக – வள்ளுவரின்
முப்பாலே அந்நூல்: முடிவில்லாப் பேரின்பம்
தப்பாமல் கற்பார்க்கே தான்;

வினா: மா. அர்த்தநாரி
விருமாண்டம்பாளையம் **விடை:** பா. முத்து

முன்னான்கு மும்முக்கால் மூவிருப தாறரைக்கால்
என்னும் இயம்பும் இருபதுக்குள் ? – உன்னியே
எத்தனையென் றெண்ண இறுதி விடைவருமே,
பத்தொன்ப தோடரையாய்ப் பார்!

வினா: சு. திருநாவுக்கரசு *சென்னை 1* **விடை:** சித்தன்

விளமாங்காய்ச் சீருண்டு வெண்பாவில் உண்டோ
இலங்கு கனிச்சீ ரிணைந்து – களங்கமறச்
சொன்னாரே காரிகையார் தோன்று கனிச்சீரென்(று).
இன்னுமுமக் கையந்தான் ஏன்?

வினா: க. கிருட்டினமூர்த்தி வழுதாவூர் **விடை:** பா. முத்து

பெரியர் சிறியரெனப் பேசுன்கிறார் அந்தப்
பெரியர் சிறியர்திறம் பேசு – கரிபார்
"செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

<▭>

புதுவையில் அழகிரி படத் திறப்புவிழாவும் பொதுக்கூட்டமும்.

புதுவை திராவிடர் கழகத்தின் சார்பாக *11 - 1 - 59 ஞாயிறு காலை 10-மணியளவில் 191 காந்திரோடு கழகஇல்லத்தில் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தலைமைவகித்துப் பேசியபின் பாவலர் பாலசுந்தரம் அவர்கள் அழகிரி படத்தைத் திறந்துவைத்து அழகிரியின் அஞ்சாத் தன்மையையும், கொள்கைப் பற்றையும் சிறந்த முறையில் விளக்கினார்கள். பிறகுபாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் முடிவுரைக்குப்பின் விழா இனிது முடிந்தது.*

மாலை 6-30-மணிக்கு செஞ்சிசாலைத் திடலில் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கிற்று. பாவேந்தர் தலைமையுரையில், கழகக் கொள்கையினையும், இன்றைய ஆட்சியாளர் போக்கினையும் விளக்கிவீரம்ததும்பச் சொற்பெருக்காற்றினார்கள். பின்னர் அணைக்கரைத் தோழர் டேப் தங்கராசன் அவர்கள் இனியமுறையில் கழகப்பண் பாடினார்கள். அடுத்துப் பாவலர் பாலசுந்தரம் அவர்கள் சுமார் 2-மணிநேரம் நகைச்சுவை,வீரம்ததும்பப் பேசினார்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் கலைமணி நன்றிநவிலக் கூட்டம் இனிது முடிந்தது.

அரசியின் தோல்வி.

"சித்தன்"

வேழநாட் டரசன் நல்ல
வித்தகன்; தருக்க நூல்கள்,
ஆழமாய்க் கற்றோன் கூர்த்த
அறிவினால் உவமை இல்லான்!
வேழநாட் டாரே யன்றி
வேறுநாட் டாரும் இன்பில்
ஆழவே ஆண்டான்! அந்நாள்
அண்டைநா டொருத்தி யாண்டாள்!

வடிவுடை அரசி அன்னாள்!
வாய்த்த'தேன்' மொழியாள், நல்ல
குடி,படை யுடையாள், வையம்
கும்பிடும் தகையாள் ஓர்கைப்
பிடியிடைப் பெண்ணாள்! மூச்சு
பெற்றபொற் சிலையை ஒத்தாள்!
விடியலின் வெள்ளி போலும்
விளங்கினாள் கலைகள் தம்மில்!

அன்னவள், ஓர்நாள் தன்னின்
அமைச்சரை அழைத்தே "ஐயா,
பொன்வளர் வேழ நாட்டான்
புத்தியிற் பெரியோன் என்பர்;
அன்னவன் அறிவின் தன்மை
அறியநான் விருப்பம் கொண்டேன்;
இன்றவற்கு என்றன் எண்ணம்
எழுதுவீர்" என்று சொன்னாள்!

அமைச்சரும் ஓலை யன்றே
அனுப்பினர் தூது வர்போய்
இமைப்பினில் கொடுத்தார்! மன்னன்
ஏற்றனன், வரவேற் பென்னும்
சுமையினைத் தாங்கி நிற்பேன்
சொல்லுக அரசிக் கென்றான்
அமைவுடன் தூதர் சென்றே
அரசியர்க்கு உரைத்து நின்றார்!

மன்னவன் விருந்தாய் அந்த
வளர்கலை அரசி சென்றாள்!
இன்னுமோர் நாட்டார் யாரும்
இதற்குமுன் கேட்டி ராத
நன்னய மொழிகள் சொல்லி
நல்வர வேற்ப ளித்தான்
மன்னவன்! வேழ நாடு
மகிழ்ச்சியில் மலர்ந்த தன்றே!

ஆடகப் பொன்னால் ஆன
அரசவைக் கொருநாள் மாலை
பாடக மகளிர் சூழப்
பல்கலை அரசி சென்றாள்!
ஏடவிழ் முல்லை மாலை
இரண்டினைக் காட்டி மன்ன
சூடுதற் குரிய மாலை
சொல்லுக எது? என்றாளே!

அவ்விரு மாலை தம்மில்
அணிமலர் மாலை ஒன்று
செவ்வையாய்க் கைபு னைந்து
செய்த"தாள்" மாலை மற்றொன்று
இவ்விரு மாலை தம்முள்
இயற்கையை அறியார் ஆகி
அவ்விடத் திருந்தோ ரெல்லாம்
அறிவினைக் குழப்பி நின்றார்

தோற்றமும் மணமும் வாய்ப்பத்
தொடுத்தஅம் மாலை தம்மின்
ஏற்றமும் தாழ்வும் காண
இருந்தவர் முயன்று ஆகாமல்
வேற்றுநாட் டரசி யின்கை
வினைத்திறம் வியந்தார், பின்னர்
ஆற்றல்சேர் மன்னன் வாய்ச்சொல்
அனைவரும் எதிர்பார்த் தாரே!

மன்னவன் கூர்ந்து நோக்கி
மற்றெதும் புரியா னாகி
அன்னவள் கைத்தி றத்தை
அறிவினுள் மெச்சி, அந்தப்
பொன்னிகர் அரச மன்றின்
புறத்துள சன்னல் யாவும்
இன்னேநீர் திறமின் என்றே
ஏவலர்க்கு ஆணை யிட்டான்

காவலர் திறந்தார் தென்றல்
கமழ்ந்தது! மலர்த்தேன் ஈக்கள்
ஆவலாய் முல்லை மாலை
அதனில்வந் தமர்தல் கண்டான்!
பாவையர் தலைவி மற்றும்
பார்ப்பவர் வியக்கும் வண்ணம்
காவலன் உண்மை மாலை
காட்டினன்! அவள்வி யந்தாள்!

அறிவிலா மக்கள் இல்லை
ஆயினும் சிலரே அந்த
அறிவினால் காட்டிற் கின்பம்
ஆக்குவர், பிறப்பி னாலே
சிறியதோர் ஈயும் வாழ்வில்
செப்பொணா உதவி செய்யும்!
அறிந்தனள் அரசி இந்த
அரும்பெரும் உண்மை யன்றே!

(ஒரு ஆங்கிலச் சிறுகதையின் தழுவல்)

◁□▷

சிக்கலைத் தீர்ப்பதில் என் பங்கு.

அரசியல் சட்ட எரிப்புப் போரில் ஆயிரக் கணக்கானவர்களைச் சிறைக்கனுப்பி, அடுத்த பெரும் போராட்டத்துக்கு நம்மைத் தயாரித்து வருகிறார் பெரியார். சிறை மீண்டு சூருவளிப் பயணம்செய்து இடைவிடாத பிரச்சாரம் செய்யும் பெரியாரைத் தமிழகம் போட்டி போட்டு உபசரிக்கிறது – பாராட்டுகிறது!

கழகத்துக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டு, ஆதரவு வளர்ந்து வருகிறது. அண்மையில் கழகத்து உட்பூசல்குறித்துப் பெரியாரவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை எனக்குப் பெரிய அதிர்ச்சியையும், வேதனையையும் தருகிறது.

திராவிடர் கழகத்தில் ஒரே ஒரு கோஷ்டி தான் இருக்கவேண்டும். அது பெரியார் பெரும் படைதான்!

கழகத் தோழர்களுக்குள் பூசல் ஏற்படுவது கழக வளர்ச்சியில் நாட்டமுடைய எண்ணற்றோருக்குப் பேரிடியாகும்-மாற்றார் கைதட்டிச் சிரிக்க வழிசெய்யும்.

இனி நாம் பூசலை விட்டொழித்தாக வேண்டும். ஒரேகுடும்பமாக இருக்கவேண்டும். தள்ளாத வயதில் தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டு நமக்காகப் பாடுபடும் பெரியாருக்கு வேதனை தரக்கூடாது.

இந்தச் சிக்கலைத் தீர்க்க ஒவ்வொருவரும் முயற்சி எடுத்தாக வேண்டும். அதுவும் இன்றே தொடங்கவேண்டும்.

இதுவரை எந்த நேரத்திலும் நான் எழுத்திலோ, மேடையிலோ உட்பூசல்களைக் குறித்து ஒரு வார்த்தையும் குறிப்பிட்டதில்லை. இனியும் அப்படிச் செய்யமாட்டேன். சில தோழர்களிடம் உரையாடும்போது என் கருத்தைச் சொல்லிவந்தேன். இனி அதனையும் நிறுத்திவிடுவேன். வேற்றுமை பாராட்டாமல் அனைவரிடமும் அன்புடன் பழகுவேன்.

இதேபோல் ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக்கொண்டு, வேற்றுமைகளை மறந்து ஒரே குடும்பமாகப் பழகிப் பெரியாருக்குமகிழ் வூட்டிக் கழகத்துக்கு வலுவூட்ட வேண்டுகின்றேன்.

கோஷ்டி சேர்ப்பது, குறை கூறுவது, ஒருவரைஒருவர் தாழ்த்தநினைப்பது முதலியவைகளில் ஈடுபடுவோர் கழகத்துக்குப் பெருந்தீங்கு செய்பவர்கள்.

தள்ளாத வயதில் பாடுபடும் தந்தை; உயிர் நீத்த உத்தமத் தியாகிகள், சிறையில் இன்னமும் வாடும் வீரர்கள், இவர்களை முன்னிட்டேனும பூசல்களை மறந்துவிடுவோம்.

இதேபோல் அனைவரும் தங்கள் உறுதியை அறிவித்துப் பெரியாருக்கு மகிழ்ச்சியையும், தோழர்களுக்குப் புதிய ஊக்கத்தையும் தர வேண்டுகிறேன்.

வளர்க நம் ஒற்றுமை!

—ஏ. பி. சனார்த்தனம் எம். ஏ.
30 – 1 – 59

புதுவையில் பாராட்டு விழா!

திரு, காமராசர் அவர்கள்
(சென்னை முதலமைச்சர்.)
புதுவைத் தமிழ்ப் பேராசிரியர்.
திரு, சு. குமாரசாமி அவர்கட்குப்
பொன்னாடை போர்த்துப் பொற்கிழி
வழங்குவார்.

தலைவர்:

புரட்சிக்கவிஞர், **திரு. பாரதிதாசன்**

பாராட்டுரை:

திருவாடுதுறை ஆதீன வித்துவான்
திரு, ச. தண்டபாணிதேசிகர்
(தமிழ் விரிவுரையாளர் அண்ணமலைப் பல்கலைக் கழகம்.)

மற்றும் அறிஞர் பலர்.

கவியரங்கமும் நடைபெறும்.

இடம்: வேதபுரீசுவரர் நூல்நிலையம்.
காலம்: 5 – 2 – 59 வியாழன் மாலை 6-மணி.

—விழாக்குழுவினர்,
புதுவை.

பார்ப்பனரும் தமிழும்!

< பார்வேந்தன் >

பார்ப்பனர்கள் தமிழுக்குத் தொண்டு செய்யவில்லையா? தொண்டுசெய்ய வில்லையா? என்றுப் பலர் இக்காலத்துப் பதறி நிற்பது காணுகையில் உள்ளபடியே உள்ளம் வேதனையடையத்தான் செய்கிறது! தொண்டு செய்தார்களேய்யயா! தொண்டு செய்தார்கள்! தொண்டு செய்ததை யாரும் மறுக்கவில்லை! என்ன தொண்டு செய்தார்கள்? கேள்வி எழும்புவது நியாயந்தானே? தமிழ் மொழி வரலாறு கூறுகிறது. எழுதியது வேறு யாருமல்ல. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

ஆரியர்கள் அவர்தம் புந்திறலம் காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர். தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியு முன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும் வட மொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர். (பக்கம் 33) என்கிறார்.

இவ்வாறு அவ்வாரியர்கள் செய்து வருவது இன்று நேற்றல்ல. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகவே செய்து வருகின்றனர் என்று கூறலாம். சங்ககாலத்தில் இருந்து அவர்கள் தம் கருத்துக்களைப் புகுத்துவதும் திருத்துவம் சேர்ப்பதும் போன்ற வேலையிலேயே ஈடுபட்டு வந்திருக்கின்றனர் என்பதற்குப் பல சான்றுகள் உள இவவாறு அவ்வாரியர் ஒவ்வாத கருத்துக்களைத் தமிழ் நூலிடத்துச் செவ்வையாக எளிதில் கண்டு கொள்ள முடியாத அளவிற்குச் செய்திருக்கிறார்கள் என்று அறிஞர் பெருமக்களே எடுத்துக் கூறும்போது நமக்கு அதைவிட வேறு சான்றும் வேண்டுமோ?

ஓரிடத்து ஈரிடத்து எங்கோ ஒருசில விடத்துச் செய்திருக்கிறார்கள் என்று நாம் விடுத்துச் செல்வதற்கும் இல்லை. ஏன்எனில் அக்கருத்துக்கள் எல்லாம் ஒருசிறிதும் அறிவறிந்த மக்களால் ஏற்றுக் கொள்வனவாக இல்லை.

மாற்றினார்கள், திருத்தினார்கள், சேர்த்தார்கள் என்று சொன்னால் என்ன அப்படி மாற்றி விட்டார்கள்? என்று பலருக்கு ஐயப்பாடு மனத்தின் கண் நிகழ்வது இயற்கை.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (குறள் 110)

இக்குறளுக்கு பரிமேலழகர் பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம். ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃது இல்லை என்று கூறிப்பின்பு பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அறுத்தலும், மகளிர்க் கருவினைச் சிதைத்தலும், குரவர்த்த புதலும் முதலிய பாதகங்களைச் செய்தல். (புறநாறு 34) இதனால் செய்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது என்று கூறுகிறார்.

எல்லீசர் என்பார் ஒரு ஆங்கில அறிஞர். அவர் தமிழ் கற்று பழந்தமிழின் பண்புகளை மேல் நாட்டாரும் அறியும் வண்ணம் ஆங்கிலத்தில் விரிவுரை எழுதலானார். அது முற்றுப் பெருது அச்சிடப் பட்டிருக்கிறது. அவரைப்பற்றி எல்லீசர் கண்டகுறள் என்ற கட்டுரையை திரு ரா. பி, சேதுப்பிள்ளை அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

மேற்கண்ட குறளை விளக்குவதற்காக எல்லீசர் அவர்கள் புறநானூற்றுச் செய்யுளாகிய,

குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கிற் கழுவாயு முளவே (புறம் 34)

என்ற அடியை எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் அவ்வடிகள் இப்போதுள்ள புறநானூற்றுப் பதிப்புக்களில்,

பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே (புறம் 34)

என்றவரிகள் அச்சிடப்பட்டுள்ளன என்னும் அதைப் பாடபேதம் என்றும் கூறுகிறார்கள் திரு. சேதுப்பிள்ளை அவர்கள்.

இதையெப்படி நாம் பாடபேதமாகக் கொள்ள முடியும்? பாடபேதமென்றால் என்ன? இக்காலத்து நாகரிக உலகின் வசதியைப்போல் அக்கால மக்களுக்கு ஏதொன்றும் ஏழுதவேண்டுமெனில் இறகும் தாளும் இன்னபிற அச்சுக்கருவிகளும் கிடையா: அவர்கள் எல்லாம் எழுத்தாணிகொண்டு பனையோலையிலேயே எழுதவேண்டி வந்தது. அவ்வாறு எழுதப்பட்ட ஒருநூலை பல படிகள் (Copy) எடுக்க வேண்டுமானால் அவ்வாசிரியரின் பல மாணவர்களும் தனித்தனியே ஒருவர் சொல்ல எழுதுவார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

★○★

மலர்

(வித்துவான் பா. முத்து, புதுவை,)

காலையில் எழுந்து சென்று
கழனியைச் சுற்றிப் பார்த்து
வேலியின் ஓரம் வந்தேன்:
விழியினைக் கவர்ந்தாய் ;வண்ணச்
சோலையாய்ச் சிரித்தாய்! கண்டு
சொக்கினேன்; மலரே! இந்த
வேலைசூழ் விரிந்த பாரில்
அழகுக்கு விளக்கம் நீயே!

வண்டெலாம் இசைவெள் ளத்தை
வானிடை நிரப்பும்; பின்பு
கண்டுனைக் காத லாலே
களிப்பொடு தழுவும்; தேனை
உண்டுனக் கின்பம் நல்கும்;
உறங்கிடும் உன்பால்; நாட்டில்
கண்டொக்கும் சொல்லார் பேச்சில்
காளையர் திளைக்கும் காட்சி!

மங்கையர் இசையால் ஆண்கள்
மனத்தினைக் கவர்தல் பாரில்
எங்கணும் இயற்கை; நீயோ
ஈடிலாப் பெண்ணாய் நின்றே
பொங்கெழில் காட்ட வண்டோ
புதியபண் உனக்குப் பாடும்;
நங்கையும் நாணும் இந்த
நடிப்பெலாம் எங்குக் கற்றாய்?

கைகள்செங் காந்தள்; கண்கள்
கவின்பெறு நெய்தல், நீலம்;
செய்யவாய் ஆம்பல்; பற்கள்
சீர்நிறை அரும்பு முல்லை;
பைத்தொடி முகமோ பூத்த
பங்கயம் எனப்பா வல்லார்
வையத்தில் பெண்ணைப் பாட
வாய்த்தநல் உவமை நீயே!

பொழிலினிற் சிரிப்பாய்; நல்ல
பொலிவுறும் கண்ணி யாகிக்
குழலினிற் குலுங்கிப் பெண்கள்
குளிர்மணம் அடையச் செய்வாய்;
எழிலுடை மாலை ஆவாய்;
இளம்மண மக்க ளோடே
பழகுவாய்; மஞ்சம் மீதும்
படுப்பாய்நீ அவர்க ளோடே!

மரைமலர் மானு கின்ற
மாதர்கள் குழலில் அந்நாள்
விரைமலர் ஆகி நன்கு
விளங்கினாய்; இன்றோ இந்தத்
தரைமிசைப் போலி யானாய்
தாளானாய், பஞ்சும் ஆனாய்;
புரையுற்ற வண்ணம் ஏற்றுப்
பொலிகின்றாய் வெட்கம்! வெட்கம்!

ஓவிய வல்லா ரெல்லாம்
உன்னைப்போல் வரைந்து விட்டுப்
பூவுல கத்தில் பட்டம்
புகழ்பணம் பெறக்காண் கின்றேன்;
பூவுனை வண்ணம் சேர்த்தே
ஆடைமேல் பொறித்தார்; காணும்
பாவையர் கண்ப றித்தாய்!
பணமெலாம் பறித்தான் விற்போன்!

தைவந்த முதல்நாள் பொங்கல்
தடபுடல்; இல்லந் தோறும்
மைவந்த கண்ணார் எல்லாம்
மலருனைச் சூடக் கண்டேன்:
நெய்வெந்து மணக்கும் "பொங்கல்
மலர்" கண்டேன்: நின்பேர் கண்டேன்!
கைவந்த புலவர் தந்த
கட்டுரை கவிதை கண்டேன்!

வண்ணத்தை உமிழுகின்ற
வானவில் கண்டேன் ஓர்நாள்:
எண்ணத்தைக் கண்ணை ஈர்த்த
எழிற்சோலை உனையும் கண்டேன்;
எண்ணினேன்: இருவர் நும்மில்
எவரிங்குச் சிறந்தார் என்றே!
கண்ணெதிர் பறந்த காக்கை
"கா, கா, கா" எனச்சொல் விற்றே!

மலரேநீ இன்றேல் நாட்டில்
மணமில்லை; நற்றேன் இல்லை;
மலரேநீ இன்றேல் மங்கைக்
கூந்தலில் மலர்ச்சி இல்லை
மலரேநீ இன்றேல் வண்டுக்
குணவில்லை மகிழ்ச்சி இல்லை
மலரேநீ இன்றேல் இந்த
மண்ணிடை எழிலே இல்லை!

<★>

குயில்

Regd. No. M. 7030

தமிழர்க்கு வாழ்க்கைச்சுவை ஏது?

உணவு விடுதி ஒன்றில்ஓர் அறையில்
இருவர் தங்கினர். ஒருவன் தமிழன்
மற்றவன் பிரான்சு நாட்டு வாணிகன்!

கமழ்புனல் ஆடி அமிழ்துண வுண்டு
தூயுடை உடுத்துச் சாய்வுநாற் காலியிற்
சாய்ந்த தமிழன், தன்னெதிர் நடப்பதை
பாடிக் கொண்டே பார்த்தி ருந்தான்!

அறை வெள்ளிக்குக் காற்கோப்பை யுணவு
கேட்டு, வாங்கி உண்டு, கிழிந்த
உடையுடன் பிரான்சினன் எதிரில் உள்ள
சாய்வுநாற் காலியிற் சாயத் தொடங்கினான்.

தமிழன் அவனை நோக்கிச் சாற்றினான் :—
" சுவையிலா உணவையும் துய்ப்பது, பிரான்சில்
உள்ளவ ரிடத்திலும் உண்டோ நண்பரே. "

தமிழனை நோக்கிப் பிரான்சினன் சாற்றினான் :—
" உயர்சுவை உணவை உண்ப தென்பது
தமிழகத் தமிழ ரிடத்திலும் உண்டோ? "

பின்னும் பிரான்சினன் பேசு கின்றனன் :—
எரிச்சல் உறுவதேன் இன்தமிழ் நண்பரே
பிறந்தஉம் நாட்டைப் பிறன்ஆள் கின்றான்;
வாழ்க்கையில் சுவையும் வாய்ப்ப துண்டோ!
வாழ்க்கைச் சுவையிலான் வாய்ச்சுவை யுடையனே!
இன்றுநீர் உண்டதில் என்சுவை கண்டீர்?
கமழ்புனல் ஆடினீர்; அமிழ்துண வுண்டீர்;
நீர்ஓர் அடிமை என்பதை நினைந்திரோ!
என்று தமிழனை என்னத்தில் ஆழ்த்தினான்
கமழ்புனல் கழிபுனல், ஆனது தமிழற்கே.
அமிழ்துண வோக்காளம் அடைந்தான்
உமிழ்ந்தது தமிழனை அறிவுலகு கான்றே!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழனியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.